# இரட்சிப்பு
RATCHIPPU

RATCHIPPU = SALVATION

**Volume-12** **January-2023** **Issue-08**

**Price Rs.5-00** **Annual Subscription Rs.60/-**

ஆண்டவரின் பேரன்பு முடிவுறவில்லை! அவரது இரக்கம் தீர்ந்துபோகவில்லை! அவைகள் புதுப்பிக்கப்படுகின்றன. புல–3:22,23





The favors of the Lord are not exhausted.
His mercies are not spent; they are renewed.
Lam-3:22,23



## இயக்குநர் கடிதம்...

From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பான 'புத்தாண்டு-2023' நல்வாழ்த்துக்கள். கடந்த நாட்களில் பெருந்தொற்று போன்ற எல்லா மோசங்களிலிருந்தும் கடவுள் நமக்கு பாதுகாப்பு அளித்து பண்டிகை காலத்தின் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறார் அவருக்கு கோடாகோடியாய் நன்றிகளை செலுத்துவோம். இருப்பினும் கொரோனா தொற்றின் ஓமிக்ரான்-பிஎ.்.ப்-7 மாற்றுருவானது உலக அளவிலும் இந்தியாவிலும் மீண்டும் வேகமெடுத்து பரவிவரும் நிலையில், நாமும் அரசின் நிலையான வழிகாட்டும் நெறிமுறைகளை கடைபிடித்து ஆரோக்கியம் காத்திட அழைக்கப்படுகிறோம். தமிழ்நாட்டில் மதவெறி கலாச்சாரமும், பிரிவினைவாத கலச்சாரமும் முற்றிலும் வேரறுக்கப்பட இரட்சிப்பு குடும்பத்தாராகிய எங்களுடன் இணைந்து ஜெபித்திட அன்புடன் அழைக்கிறோம்.

நமது ஊழிய இயக்குநரின் இம்மாத ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். நமது கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், www.ratchippu.in/ratchippu.in என்ற முகவரியில் செயல்படும் நமது GOOD TIDINGS - RATCHIPPU HOME வலைதள ஊழியங்கள், புத்தக-வெளியீட்டு ஊழியங்கள் ஆகிய அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். இம்மாத 'ஜெப-ஜன்னல்' ஜெபங்கள் 13, 20, 27 தேதிகளில் நடைபெறும். 'அனைவரும்-ஊழியத்தில்' - கைப்பிரதி ஊழிய திட்டத்தில் இணைந்து கைப்பிரதி விநியோகப் பணியில் உதவிட அனைவரையும் அழைக்கிறோம்.

வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம் பக்கம் 12-ல்). தேவ சமாதானம் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்கள் உடன் ஊழியன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-145** புலம்பல் 3:22,23

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

### சத்திய வேதம் (ரேனியஸ்-1840)

நாங்கள் நிர்மூலமாய் அழியாதிருக்கிறது கர்த்தருடைய கிருபைகள். ஏனெனில், அவருடைய இரக்கங்கள் முடிவடைந்ததில்லை. அவைகள் காலமாறு புதியவைகள். அவருடைய உண்மை பெருத்திருக்கிறது

### பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)

நாம் நிர்மூலம் ஆகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவு இல்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள். உமது உண்மை பெரியதாயிருக்கிறது.

### திருவிவிலியம் (பொது-1995)


ஆண்டவரின் பேரன்பு முடிவுறவில்லை! அவருடைய இரக்கங்கள் தீர்ந்துபோகவில்லை! அவைகள் காலை தோறும் புதுப்பிக்கப்படுகின்றன! ஆண்டவரே, நீர் பெரிதும் நம்பிக்குரியவர்!

### பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)


கர்த்தருடைய அன்பு மற்றும் கருணைக்கு முடிவு இல்லை. கர்த்தருடைய இரக்கம் எப்பொழுதும் முடிவதில்லை. ஒவ்வொரு காலையிலும் அவர் அதை புதியதாக்குகிறார். உமது உண்மை மிகப்பெரியது.

வசன தியானம் - 139

# புதுப்பிக்கப்படுகின்றன



## கடவுளின் கிருபையும் இரக்கமும்




**Lam-3:22,23** புலம்பல்-3:22,23

**ஆண்டவரின் பேரன்பு முடிவுறவில்லை! அவரது இரக்கம் தீர்ந்துபோகவில்லை! அவை புதுப்பிக்கப்படுகின்றன! நீர் பெரிதும் நம்பிக்கைக்குரியவர். புல–3:22,23**

சிறையிருப்பின் எதிர்மறையான மற்றும் கடினமான சூழ்நிலைகளை நினைத்து எரேமியா கலங்கிக்கொண்டிருந்தபோது, திடீரென்று, அவரது எண்ணம் கடவுளின் நேர்மறைத் தன்மையை நோக்கி திரும்பிற்று. இங்கு காணப்படும் *mercies* என்ற எபிரேய வார்த்தை பழைய ஏற்பாட்டில் 250 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது கடவுளின் அன்பு, இரக்கம், மன்னிப்பு மற்றும் உண்மைத்தன்மையை உள்ளடக்கிய சொல்லாக இடம்பெறுகிறது. கடவுளுடைய கோபத்தின் இருண்ட நிலையில் கூட, நம்பிக்கை இருந்தது.

இங்கு, கடவுளின் ஒப்புதல் வாக்குமூலம் மன்னிப்பையும் புதுப்பிப்பையும் தரு கிறது. கடவுள் தம் இரக்கங்களை மீண்டும் புதுப்பிக்கிறார் என்பதை எரேமியா இங்கு நினைவுகூர்கிறார். இப்பகுதி, ‘‘நீர் பெரிதான நம்பிக்கைக்கு உரியவர்.’’ என்ற சக்திவாய்ந்த ஒரு அறிக்கையுடன் முடிவடைகிறது. உடைந்துபோகும் மனித வாக்குறுதிகள் மற்றும் ஏமாற்றங்கள் நிறைந்த உலகில் நமக்கு இவ்வறிக்கை மலைபோன்ற நம்பிக்கையைத் தருவதாகும்.

மனந்தளர்ந்து போராடிக்கொண்டிருந்த எரேமியா, தன் பரலோகத் தந்தையின் வாக்குறுதியில் கவனம் செலுத்தத் தீர்மானித்தார். நாமும் மனச்சோர்வு அடையும்போது எரேமியாவைப்போல் கடவுளின் நேர்மறை மற்றும் உண்மைத் தன்மையை நினைவில் கொண்டு, புல-3:22,23 வசனங்களை நமக்கு நாமே மேற்கோள் காட்டப் பழக்கிக்கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் கடவுள் நம் ஜெபங்களுக்கு எவ்வாறெல்லாம் பதிலளித்தார் என்பதை நாம் நினைவில் கொள்வோம். நாம் பயந்தபோது தைரியம் தந்தார், மனிதர் நம்மை ஏமாற்றிய போது நம்மை நேசித்தார், மனிதர் நம்மைக் கைவிட்டபோது கர்த்தர் நமக்கு உண்மையாக இருந்தார் அல்லவா? இந்த உண்மையை சிந்தை யில் ஏற்றுவோம். கடவுள், உண்மை கிருபை மற்றும் இரக்கம் நிறைந்தவர். எனவே, நாம் பெறவேண்டிய தண்டனையை நமக்குத் தரவில்லை. இதுவே ஆண்டவர் தம் கிருபையையும் இரக்கத்தையும் நமக்கு புதுப்பித்ததற்கான அடையாளம் என்பதை உணர்ந்து புதிய வருடத்தை வரவேற்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



அருட்திரு. தர்மராஜா

படைப்பு: REV. SJD. தர்மராஜா, ஆயர் & அபிவிருத்திச் செயலர், இந்திய சுதேச மிஷனரி சங்கம், சென்னை.
REV. SJD. DHARMARAJA, PRESBYTER & HON. PROMOTIONAL SECRETARY, NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

புத்தாண்டு சிறப்பு தேவசெய்தி...



அருட்திரு
டி. பால் வில்லியம்

## நம்மை குணப்படுத்தி, மீட்டு, தூய்மைப்படுத்தி

# நீதியை நம்மில் நிலைநாட்டும் கடவுள்

ஆயினும், நான் எருசலேமின் காயங்களை ஆற்றிக் குணப் படுத்துவேன்; அம்மக்களுக்கு நலன் அளித்து நிலையான நிறைவாழ்வை வழங்குவேன். எரேமியா–33:6

அக்காலத்தில் நான் தாவீதிலிருந்து நீதியின் தளிர் ஒன்று முளைக்கச் செய்வேன். அவர் நாட்டில் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவார்! எரேமியா–33:15

**Rev. D. Paul William** M.A., B.D., M.Th

PRESBYTER IN-CHARGE AND CHAIRMAN, CSI ST. THOMAS TAMIL CHURCH PASTORATE

DIOCESE OF MADRAS, CHENNAI, SOUTH INDIA

இரட்சிப்பு வாசகர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள்! ஓர் ஆண்டை நிறைவு செய்து, புதிய ஆண்டை எதிர்நோக்கும்போது, புத்தாண்டு நமக்கும், நம் குடும்பத் திற்கும், நாட்டிற்கும் எப்படிப்பட்டதாக அமையுமோ என்கிற அங்கலாய்ப்பும் எதிர்பார்ப்பும் நம்மில் மிகுதியாகவே காணப்படுகிறது. இங்கு எரேமியா இறை-வாக்கினரும் அவ்வாறே யூதா - இசுரயேல் மக்களின் எதிர்காலம் குறித்து அங்க லாய்த்துப் புலம்புகிறதைப் பார்க்கிறோம். கடவுள் அவர்களை பாபிலோனிய சிறையிருப்பினின்று மீட்டு, மீண்டும் தேசத்தைக் கட்டி எழுப்பி நீதியை நிலை நாட்டுவார் என்ற நம்பிக்கையை அளிக்கின்றார். எரேமியா 33-ம் அத்தியாயம் எருசலேம் - யூதா, அதாவது இசுரயேல் - யூதா நகரங்கள் திரும்ப கட்டி எழுப்பப்படு வதை எடுத்துரைக்கிறது (இங்கு இசுரயேல் என்பது எடுசலேம்-நகர் என, பெயர் மாற்றி அழைக்கப்படுகிறது). இத்திருமறைப் பகுதி எதிர்கால விடுதலைக்கான மறைபொருளை (apocalyptic) உறுதிசெய்கிறது. இறையியலாளர்கள் இந்த அத்தியாயம் எரேமியாவுக்கு உரியதல்ல எனும் வாதத்தை முன்வைத்தாலும், இதில் இடம்பெற்றுள்ள எச்சரிப்பு, தண்டனை மற்றும் நம்பிக்கையின் செய்திகள் எரேமியாவின் சிந்தனைகளே என்பது தெளிவாக புலப்படுகிறது. எனினும், அதன் அமைப்பு அவரது சீடர்களின் பிரதிபலிப்பாக இருப்பதாக நம்பப்படுகிறது. ‘வெறுமைக்கும் அழுகைக்கும் பின் நாட்டில் மகிழ்ச்சியும் மங்களமும் மீண்டும் பரிமளிக்கும்’ என எரேமியா இங்கு உறுதியளிக்கிறார். இந்த பின்னணியத்துடன் இந்தப் பகுதியினை புத்தாண்டின் வாக்குறுதியாக நாம் தியானிப்போம்.

1. காயங்களை ஆற்றிக் குணப்படுத்தும் கடவுள்: (எரே 33:1-7)

God brings Recovery and Healing: யூதாவும்-எருசலேமும் தங்கள் தீமைகள், தவறுகளினிமித்தம் கல்தேயரால் வீழ்த்தப்பட்டு பாழாய்க் கிடக்கும். அது உயிர்ச் சூழலற்று பாலைநிலம் ஆக்கப்படும். மக்கள் சிறைபிடிக்கப்பட்டு நாடு கடத்தப் படுவார்கள். ஆனாலும், அவர்கள் காயங்களைக்கட்டி ஆறுதல் அளித்து கடவுள் அவர்களுக்கு நலம் அருள்வார். யூதா-இசுரயேலை மீண்டும் அவர்தம்

இருப்பிடத்திற்கு அழைத்து வந்து நாட்டைக் கட்டி எழுப்புவேன் என்கிறார் ஆண்டவர். நம்மையும்கூட துன்பங்கள், கவலைகள், இடர்பாடுகள் அனைத்தினின்றும் கடவுள் ஆற்றித் தேற்றுகிறவர். குறிப்பாக கடந்த 2-ஆண்டுகள் கொரோனா வைரஸ் தொற்று மற்றும் பலவித நோய்கள், இன்னல்களினின்றும் நம்மை காப்பாற்றி இருக்கிறார். வரும் புதிய ஆண்டிலும் நமக்கு குணமளித்து காப்பாற்ற அவர் ‘ஆற்றலுள்ள’ ஆண்டவராயிருக்கிறார்.

2. குற்றங்களிலிருந்து மீட்டு தூய்மை அளிக்கும் கடவுள்: (எரே 33:8-11)

God is cleansing and Forgiving all our guilt and sins: யூதாவும் - இசுரயேலும் தொடக்க முதல் இதுநாள் வரையும் கடவுளுக்கு புறமுதுகு காட்டி, தீய செயல்களில் ஈடுபட்டு, தங்கள் அருவருப்புகளினால் அளவுக்கு மிகுதியாகக் கடவுளுக்கு கோபம் மூட்டினார்கள் (எரே 32:29-35). அந்தச் சூழலிலும் கடவுள் தமது இரக்கத்தின் மிகுதியால் அவர்களது குற்றங்கள், பாவங்கள், கிளர்ச்சி களை மன்னித்து, தீட்டுப்பட்ட அவர்களைத் தூய்மைப்படுத்துவார் என்பதே வாக்குறுதி. ஏனெனில் இவர்களுக்கு கிடைக்கும் இந்த இந்த அருளை மக்கள் கண்டு கடவுளைப் புகழ்ந்து மகிழ்வர். இது இவர்களுக்கு மட்டுமல்ல, உலக மக்கள் அனைவருக்கும் அருளப்படும் தூய்மையின் மீட்பின் மகிழ்ச்சியாகும்.

பி.எ.ஃ.ப்-7 என்ற உருமாறிய கொரோனா-வைரஸ் மீண்டும் நம் வாழ்வை அச்சுறுத்தி வரும் இந்நாட்களில், ஆண்டவர் நம் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தி, நம் வாழ்விடங்களை தூய்மைப்படுத்தி நம்மைப் பாதுகாக்க ஆற்றலுடையவராய் இருக்கிறார். கடவுளுக்கு எதிரான நமது கீழ்படியாமையையும் குற்றங்களையும் மனிதருக்கு எதிரான நமது தவறுகளையும் கர்த்தர் மன்னித்து நம்மைத் தூய்மை யாக்கி விடுவிக்கிறார்.

3. நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டும் கடவுள்: (எரே 33:12-16)

God executes justice and righteousness in the Land: நகரங்களும் கிராமங்களும் நிறைந்த யூதா - இசுரயேல் நாடு இன்று பாழடைந்து கிடக்கிறது. வளங்கள் அழிக்கப்பட்டதால் மேய்ப்பர்கள் தங்கள் மந்தையை மேய்த்து இளைப்பாற்ற இயலாமல் இருக்கிறார்கள். ஆனால் கடவுள் யூதா - இசுரயேலைக் குணமாக்கி, மன்னித்து, தூய்மைப்படுத்தி சிறைப்பட்டவர்களை தங்கள் நாட்டிற்கு திரும்பச் செய்து, மீண்டும் குடியிருப்புகளைக் கட்டியெழுப்பச் செய்வார். மேய்ப்பர்கள் எருசலேம் மற்றும் யூதாவின் வெளிகளில் ஆடுகளை எண்ணிச் சரிபார்த்து கண்காணிப்பார்கள் என்பது நாட்டின் ஓர் அமைதியான வாழ்வுச்சூழலைக் குறிக்கிறது (எரே-33:13). எதிர்வரும் நாட்களில் யூதா விடுதலை பெற்று எருசலேம் பாதுகாப்புடன் வாழும் என்பதே இசுரயேல்-யூதா வீட்டாருக்கு கடவுள் தரும் வாக்குறுதியும் இறைவாக்கும் ஆகும். இதன் வெளிப்பாடே, ‘‘தாவீதின் வேரில் இருந்து நீதி எனும் தளிர் ஒன்று முளைக்கச் செய்வார்’’ என்பதாகும். (எரே 33:15, 23:6, எசா-11:1, தி.வெளி 5:5, 2:15). அவரே இவ்வுலகிற்கு நலமும் வளமும் அருளி, தூய்மையான நிலையான நிறைவாழ்வை அருளும் மெசியாவாகிய இயேசு. எருசலேமானது ‘யாவே-சித்கேனு’ - ‘ஆண்டவரே நமது நீதி’ (வுாந டுழசன ளை ழரச சபைாவநழரளநௌள) என்ற பொருளில் அழைக்கப்படும் (எரே-33:16, 23,6). (இங்கு இசுரயேல் என்பது எருசலேம் எனப் பெயர் மாற்றி அழைக்கப்படுவதை மீண்டும் நிவைில் கொள்க). நம்மையும் நம் குடும்பங்களையும் நம்மை சுற்றியுள்ள மக்களையும் நம் நாட்டையும் நாம் எதிர்நோக்கியுள்ள இப்புதிய ஆண்டில் (2023) கடவுள் நேர்மையிலும் நீதியிலும் நிலைநாட்டி வழிநடத்துவாராக. ஆமேன்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு.டி. பால் வில்லியம்

புத்தாண்டு சிறப்பு தேவசெய்தி...



அருட்திரு
ஆர். ஜான் கிரிதரன்

# புதிய விடியலில் ஒளிமயமான எதிர்காலம்

ஆண்டவரின் பேரன்பு முடிவுறவில்லை!
அவரது இரக்கம் தீர்ந்துபோகவில்லை!
அவை புதுப்பிக்கப்படுகின்றன!
நீர் பெரிதும் நம்பிக்கைக்குரியவர்!
புலம்பல்– 3:22,23


## Rev. R. John Giridharan M.A., B.Ed., B.D.

Presbyter and General Secretary

GOSPEL PARTNERS MOVEMENT, CHENNAI, SOUTH INDIA


கிறிஸ்துவுக்குள் அன்பான இரட்சிப்பு வாசகர்களே,

எல்லாம் வல்ல மூவொரு கடவுளின் திருப்பெயரால் உங்கள் அனைவருக்கும் 'புத்தாண்டு-2023-க்கான' எனது அன்பிற்கினிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டவரின் பேரன்பு முடிவுறவில்லை! அவரது இரக்கம் தீர்ந்து போகவில்லை! காலைதோறும் அவை புதுப்பிக்கப்படுகின்றன! நீர் பெரிதும் நம்பிக்கைக்குரியவர்!
புலம்பல்- 3:22,23

எரேமியாவின் 'புலம்பல்' என்னும் திருவிவிலியத் திருநூல், கி.மு.586-ம் ஆண்டில் எருசலேம் நகருக்கு நேரிட்ட பெரழிவையும், அதன் தொடர் நிகழ்ச்சியான நாடு-கடத்தலையும் குறித்த புலம்பல் பாடலாக அமைந்துள்ளத. இந்நூலில் அவலச் சுவையே மேலோங்கி நிற்கிறது. எனினும், கடவுளின் அருளால் கிடைக்கவிருக்கும் ஒளிமயமான எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் இந்நூல் வெளிப்படுத்துகிறது. இந்தச் செய்தியைத்தான் இறைவாக்கினரான எரேமியா நாம் தியானத்திற்காக எடுத்துக்கொண்டுள்ள இந்த திருவார்த்தையில் வெளிப்படுத்துகிறார்.

கடந்த 2019ம் ஆண்டு மனுக்குலத்தைத் தாக்கத் தொடங்கிய கொரோனா தீநுண்மிப் பெருந்தொற்று 2022ம் ஆண்டுவரை நீடித்தது. அதன் பின்னர் உக்ரைன்-ரஷ்ய போர் வெடித்தது. இவ்விரு அழிவுகளும் உலகப் பொருளாதாரத்தையே

புரட்டிப்போட்டன. ஏழைகள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து மிக-மிக ஏழைகளாயினர். இடர்களையும் பேரிடர்களையும் தங்களுக்கு அரசியல் ஆதயமாக சாதகமாக்கிக்கொள்ளும் ‘மார்பியாக்கள்’, பணமுதலைகள் மேலும்-மேலும் செல்வந்தர்கள் ஆயினர்.

இந்த சூழலில்தான் புதிய விடியலின் 2023-ம் ஆண்டு தொடங்குகிறது.

இந்நிலையில் நமது ஆண்டவரின்மேல்...

அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கும் ஆண்டுவர்மேல், தலைமுறை தலைமுறையாய், சந்ததி-சந்ததியாய் இரக்கம் காட்டிவரும் ஆண்டவர்மேல், வலியோரை அரியணையினின்று தூக்கி எறியும் ஆண்டவர்மேல், தாழ்நிலையில் இருப்போரை உயர்த்தும் ஆண்டவர்மேல், பசித்தோரை நலன்களால் நிரப்பும் ஆண்டவரில் நாம் கொண்டுள்ள பெரிதான நம்பிக்கையுடன் புத்தாண்டைத் தொடங்குகிறோம். (லூக் 1:48-53).

2023-ம் ஆண்டுக்கான ஆண்டவரின் வாக்காக, நமக்கு அருளப்படுவது...

“நீங்கள் உண்டு நிறைவுகொள்வீர்கள். அப்பொழுது, வளமிகு நாட்டை உங்கள்ளுக்குக் கொடுத்ததற்காக உங்கள் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவீர்கள்.” (இணைச்சட்டம்-8:10).

2023-ம் ஆண்டை வளமிக்க ஆண்டாக கடவுள் நமக்குத் தருவார்...

“உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்” (யோவான்-16:20)

ஆண்டவர் இவ்வாறு சொல்லுகிறார்...

“என்றுமுள பேரன்பால் உங்களுக்கு இரக்கம் காட்டுவேன்” (ஏசாயா-54:8)

நாமும் நம்முடைய கர்த்ராகிய இயேசு கிறிஸ்துவுக்காக பெரும் தொண்டுபுரிவோம். கடவுளிடமிருந்து வரும் ஆசியை நமதாக்கிக்கொள்வோம். தந்தை, மைந்தன், தூய ஆவியராம் நம்முடைய மூவொரு கடவுள்தாமே நம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், திருச்சபையின் அருட்பணிகளிலும், நம்முடைய அலுவல்-தளங்களில் நாம் கையிட்டுச் செய்கிற அனைத்து பிரயாசங்களிலும், நமது போக்கிலும்-வரத்திலும் நம்முடனேயே இருக்கும் இம்மானுவேலராக இருந்து வளங்களையும், நலங்களையும் நிறைவாய் நமக்கு அருள்வாராக. அவருக்கே அனைத்து புகழ்ச்சியும், மாட்சியும் உண்டாவதாக. ஆமென். அனைவருக்கும் மீண்டுமாக எனது 2023-ம் ஆண்டுக்கான புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு. ஆர். ஜான் கிரிதரன்

அருட்பணி. ஆர். ஜான் கிரிதரன் M.A., B.Ed., B.D., பொதுச்செயலர்,
நற்செய்தி பங்காளர் இயக்கம், (காஸ்பெல் பார்ட்னர்ஸ் மூவ்மென்ட்),
சென்னை, தென்னிந்தியா. அலைப்பேசி: 9003274028

வேத ஆராய்ச்சி - 68



# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev. Dr. D. Suresh Rajan

சங்கீதம் – 68

Episode - 68

Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

முன்னுரை:-

அன்பான இரட்சிப்பு வாசகர்களுக்கு இயேசுவின் இனிய நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்கள். கடந்த ஆண்டு முழுவதும் கண்மணிபோல் நம்மைப் பாதுகாத்து புதிய வருடத்துக்குள் பிரவேசிக்கச் செய்த இறைவன் இயேசுவுக்கு கோடானுகோடி நன்றிகளைச் சொல்ல கடமைப்பட்டுள்ளோம். கொரோனா தொற்றின் புதிய மாற்றுருவான பி.எ.்.ப்-7 பரவல் பற்றிய செய்தி நம்மை சற்றே அச்சமடையச் செய்தாலும், ஆண்டவர் நம்மோடிருக்கிறார் என்ற நம்பிக்கையோடு அவரைச் சார்ந்துகொள்ள இறைவன் நமக்கு தமது பேரருளை தந்தருள்வாராக. இந்த சங்கீதம் பல்வேறு இறையியல் பேருண்மைகளை உள்ளடக்கியதாகும். எனினும், புதிய வருடத்துக்குள் பிரவேசித்திருக்கும் நமக்கு தேவன் இச்சங்கீதம் மூலம் கூறும் சில சத்தியங்களை இங்கு நாம் காண்போம்.

1. ஆதரிக்கும் தேவன்:- (வச 5,6)

‘‘தேவன் திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாய் இருக்கிறார். தேவன் தனிமையானவர்களுக்கு வீடு-வாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார்.’’ கடந்த இரண்டு வருடங் களில் தீநுண்மிப் பெருந்தொற்றான கொரானாவின் காரணமாக ஆயிரக்கணக் கானோர் தங்கள் பெற்றோரை இழந்து, ஆதரவற்றவர்களாய் மாறிப்போயினர். தங்கள் எதிர்காலமே இருளாய் மாறிப்போனதாக நினைக்கும் ஆயிரக்கணக்கான அத்தகையோருக்கு இறைவனின் திட்டம் என்ன? என்ற கேள்வி நம் அனைவ ருக்கும் ஏற்பட்டிருக்கக்கூடும். சங்கீதக்காரர், இறைவன் எப்படிப்பட்டவர்? தாய்-தந்தையரை இழந்த, தங்கள் அருமையான வாழ்க்கைத்துணையை இழந்த அனைவரைக் குறித்தும் அவர் அக்கறையுள்ளவர் என இங்கு குறிப்பிடுகிறார். தேவன் ஆதரவற்றவர்களுக்கும், விதவைகளுக்கும் வாழ்வளிக்கிறவர் என்பதையும் இவ்வசனங்களில் காண்கிறோம். இதை வாசித்துக்கொண்டிருக்கும் நம்மில் பலருங்கூட இவ்வித சூழ்நிலைகளில் இருக்கலாம். தேவன் நிச்சயமாக உங்கள் வாழ்வைப் பொருளுள்ளதாக மாற்றுவர். வேதனைகள் மற்றும் இடுக்கண்கள் வழியாய் கடந்து செல்வது என்பது தேவனால் நமக்குக் குறிக்கப்பட்ட பாதையாக இருக்கலாம். ஆனாலும், தேவன் தமது கிருபை மற்றும் இரக்கத்தினால் நம் வாழ்வின் தேவைகளைப் பூர்த்திசெய்து நமக்கு வீடு-வாசல் ஏற்படுத்தி நாம் ஸ்திரத்தன்மையோடு வாழ நமக்கு உதவி செய்கிறவர். இதை வாசித்துக் கொண்டிருக்கும் நமக்கு கர்த்தர் நல்ல வசதி-வாய்ப்புகளைக் கொடுத்திருப் பாரானால், இறைவனின் பிரதிநிதிகளாய் நாமும் ஒடுக்கப்பட்ட மக்களை நினைவில் கொண்டு அவர்களுக்குத் உதவிகளைச் செய்ய கடமைப்பட் டுள்ளோம். ‘‘சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான். தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.’’ (சங்-41:1).

2. அனுப்பும் தேவன்:- (வச 11-13)

''ஆண்டவர் வசனம் தந்தார், அதைப் பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி'' (வச-11). ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்புகள் பலவற்றில், ''ஆண்டவர் கட்டளை தந்தார், அதை அறிவிக்கிற பெண் களின் கூட்டம் அதிகம்'' என்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆண்டவர், தமது பிரதான கட்டளையை (மத்-28:19) மக்களுக்கு அறிவிக்கிற 'சீடர்-கூட்டம்' அதிகமாவதை மிகவும் விரும்புகிறார். 'அறுப்பு மிகுதி, வேலையாட்களோ சொற்பம்' என்று சொன்னவர் இன்றும் தம் அருட்பணியைத் தொடர ஆட்களைத் தேடுகிறார். உலகளாவிய நற்செய்தி ஊழியத்தில் பெண்களின் பங்கு இன்றியமையாததாகும். அருட்பணியை, ஆண்களைவிட பெண்கள் பன்மடங்கு சிறப்பாகச் செய்கிறார்கள் என்பது மறைக்க முடியாத உண்மையாகும். இந்த புதிய ஆண்டிலும் நம் குடும்பத்திலும் திருச்சபையிலும் உள்ள பெண்களை அதிகமதிகமாய் நற்செய்தி பணிகளில் பயன்படுத்துவோம். இன்று, பல பேராயங்களில் பெண் அருட்பணியாளர்களுக்கு சம-அந்தஸ்து வழங்கப்படாதது வெட்கத்துக்குறியதாகும். ஆண்டவருடைய திட்டம் அவரது வார்த்தைகள் பெண்கள் மூலம் பிரகடனப்படுதப்படவேண்டும் என்று இருக்குமானால், நாம் அதற்கு தடையாயிராதபடி பார்த்துக்கொள்வோம். 2023ல் இயேசுவின் நற்செய்தி இந்தியாவின் எல்லா மூலை-முடுக்குகளிலும் செல்ல பணிகளை சரியாகச் செய்வோம்.

3. வரங்களைத் தரும் தேவன்:- (வச-18)

''தேவனாகிய கர்த்தர் மனுஷருக்குள் வாசம்பண்ணும் பொருட்டு துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர்.'' நம்முயை சுய புத்தியி னாலும் சுயபெலத்தினாலும் ஆண்டவருடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்புவது முடியாத விஷயம். ஆகவே, ஆண்டவர் நமக்கு பல வரங்களை அளித்துள்ளதாக நாம் இப்பகுதியில் காண்கிறோம். வேதம் 25க்கும் மேலான வரங்களைக்குறித்து நமக்குப் போதிப்பதாக வேத வல்லுநர்கள் பட்டியலிடுகின்றனர். இன்று பல 'தன்னார்வ' பிராத்தனைக் கூட்டங்களில் உபதேசிமார் 'அந்நிய பாஷை' வரத்தை மாத்திரம் மிகைப்படுத்தி தங்கள் வியாபார தந்திரங்களால் தேவஜனங்களை உணர்ச்சிவசமாக்கி 'விசுவாச-துரோகம்' செய்கிறதை நாம் கண்கூடாகப் பார்க்கி றோம். எனவே, விசுவாசிகளாகிய நாம் கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ள வரங் களை அடையாளம் கண்டு, அவற்றை தேவநாம மகிமைக்காகப் பயன்படுத்து வோம். நம் சக-விசுவாசிகள் தங்களுக்கு 'இந்த வரம் கிடைத்திருக்கிறது -அந்த வரம் கிடைத்திருக்கிறது' என்று கூறும்போது, அதற்காக நாம் தேவனை மகிமைப்படுத்தி, நமக்கு கடவுள் அருளிய வெகுமதியான வரங்களை பயபக்தி யுடன் உபயோகித்து, வரங்களை விருத்திசெய்து தருமாறு கடவுளின் பாதத்தில் ஜெபத்துடன் காத்திருப்போம். (1கொரி-12, எபே-4, ரோம-12, 1பேது-4, யாத்-31).

முடிவுரை:-

புதிய வருடத்தில், பிரவேசித்திருக்கும் நமக்கு இச்சங்கீதம், மிகவும் ஆசீர்வதமான இறைச்செய்திகளை பறைசாற்றுகிறது, அவையாவன: ''நம்முடைய தேவன் இரட்சிப்பை அருளுகிறார், அவரால் மரணத்துக்கு நீங்கும் வழிகளுண்டு,'' (வச-20). ''நமக்கு மீட்பை அருளும் ஆண்டவரை நாம் இறுக பற்றிக்கொண்டு அவரையே ஸ்தோத்தரிப்போமாக,'' (வச-26, 32), ''ஆண்டவரின் வல்லமையை பிறருக்கு எடுத்துரைப்போமாக,'' (வச-34), ''இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம் ஜனங்களுக்கு இந்த புதிய ஆண்டில் சத்துவத்தையும், பெலனையும் தந்தருள் வாராக. இறைவனுக்கே எல்லா புகழும் உண்டாவதாக.'' (வச-25). உங்கள் அனைவருக்கும் எனது குடும்பத்தின் சார்பில் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CO-FOUNDER, BIBLE TRANSLATION INITIATIVES, COIMBATORE, SOUTH INDIA
ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,
இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-146 சரியான பதில் அளித்தோர்

1) அமலியா TVM
2) அமிர்தகனி CHE
3) ஏஞ்சல் சி. TIN
4) ஏஞ்சல் ராஜதுரை CHE
5) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
6) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
7) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
8) அனிதா மோகன்ராஜ் ERO
9) அரோமா சாத்ராக் TIN
10) ஆர்தர் மாசில்லாமணி CHE
11) அருள்செல்வி VIR
12) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
13) பங்கஜம் வில்சன் CBE
14) பெல்சி தங்கராஜ் CHE
15) பெனிட்டா பிராங்க்ளின் CHE
16) பியூலா அலெக்ஸ் CHE
17) பியூலா ஜேசுராஜன் PON
18) செலினா பென்சி வில்சன் DR, KUW
19) சந்திராபாய் மாசிலாமணி AVD
20) சந்திரலேகா KAL-AP
21) சந்திரா சாமுவேல் TIN
22) சார்லஸ் ஃபின்னி DR. CHE
23) சார்லட் டேவிட் CHE
24) சிட்டி TR. TVL
25) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
26) கிறிஸ்துதாஸ் GOP
27) கிறிஸ்டி ஞானராஜ் CHE
28) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
29) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
30) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
31) தெபோராள் ஆனந்தமணி CNG
32) டெல்பி பாத்திமா CHE
33) தேவமணி ஆபிரகாம் TUT
34) தேவநேசம் ராஜாசிங் CHE
35) டோராபாய் CHE
36) எலிசபெத் செல்லத்துரை CHE
37) எஸ்தர் D.R. TIN
38) எவாஞ்சலின் கிப்ஸன் MSK
39) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
40) குளோரா BBC BD TEN
41) ஞானம் ஜெபராஜ் TIN
42) ஞானம் பிலிப் CHE
43) கோல்டா ஜேசுபாதம் MUM
44) கிரேஸ் மனோன்மணி ஏனோஸ் CHE
45) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
46) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
47) கிரேஸியா ஜெயபால் CHE
48) கிரிசெல்டா செய்லர் CHE
49) ஹெலன் ஜான்சிராணி TIN
50) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
51) ஹெலன் திலக் TUT
52) ஹேமா அஜீத் CHE
53) ஹேமா கேப்ரியேல் BAN
54) ஹெப்சிபா மங்களராஜ் TIN
55) ஹிம்லா ராஜகுமாரி CHE
56) இளவரசி ஜோபிதா CBE
57) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
58) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
59) ஜமீலா செல்வராஜ் CHE
60) ஜேன் தர்மராஜ் TIN
61) ஜான்ஸி சந்தியா MAR
62) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
63) ஜெபா ஜெயராஜ் AVD
64) ஜெபக்குட்டி மோசஸ் TIN
65) ஜெபரத்தினம் மெர்லின் TUT
66) ஜெபசீலி கிளின்டன CHE
67) ஜெபஸ்டின் ஜி. KNR
68) ஜெபா சீனி MKM
69) ஜெமீலா நிக்ஸன் CHE
70) ஜெனிஃபர் VAN
71) ஜெனித்தா செல்வின் TIN
72) ஜெனிட்டா ஹெலன் CBE
73) ஜெனிட்டா ஷெருபா ஞானவேல் DAR
74) ஜெரின் ஸ்டீபன் CHE
75) ஜெஸி செல்லதுரை CBE
76) ஜெஸி ஜெயக்குமார் TIN
77) ஜெயா ஆல்பர்ட் KUM
78) ஜெயக்குமாரி CBE
79) ஜோனா ஸ்டீபன் AVD
80) ஜோஸ்பின் ஜெஸி CHE
81) ஜாய்ஸ் பாண்டியன் CHE
82) ஜூலியட் CHE
83) ஜூலியட் ஜெயக்குமார் TIN
84) கலா கிருபாகரன் TIN
85) கலையரசி செல்வராஜ் CHE
86) கஸ்தூரி எலியாஸ் TIN
87) கிங்ஸ்லி ரவிக்குமார் CHE
88) கிருபா சாந்தி AV. CHE

## வேதாகம போட்டி-146 சரியான பதில் அளித்தோர் பட்டியலின் தொடர்ச்சி

89) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
90) லதா மைக்கேல்ராஜ் CHE
91) லீலா டேவிட் CHE
92) லீலா ஜோஸப் CBE
93) லில்லி ஜாண்ஸன் CHE
94) லிஸி டென்சிங் TIN
95) மல்லிகா V. CHE
96) மல்லிகா ஜாய்ஸ் TCY
97) மணிமேகலை ஜெயக்குமார் TIN
98) மனோகரம் தனராஜ் NAZ
99) மரிய பாப்பா CHE
100) மரியாள் JS TUT
101) மெஜிலா ஜோஷ்வா TUT
102) மெர்சிபா CBE
103) மெர்சி தனராஜ் CBE
104) மெர்சி ∴புளோரா பாஸ்கர் VEL
105) மெரிட்டா ஜெயபாலன் TCY
106) மியூரியல் புஷ்பராஜ் CHE
107) நகோமி நிர்மலா J CHE
108) நிக்ஸன் எவர்பிரைட் TIN
109) ஆலிவ் ஜெயபாலன் CBE
110) பாக்யபாய் ஆரோன் TIN
111) பமீலா எட்வின் KAN
112) பால் தங்கம் CHE
113) பெர்சி பால் பொன்சிங் SAW
114) பிங்க்லின் தேவமலர் CHE
115) பிரேமா பூபாலன் AVD
116) பிரேமா ஜானி PCM
117) பிரேமா ஸ்டாலின் CHE
118) பிரின்ஸ் தயாநிதி CHE
119) பிரிஸ்கில்லாள் சசி CBE
120) பிரிசில்லா தாஸ் CHE
121) ரேச்சல் கனகராஜ் CBE
122) ராஜபிரமிளா TPT
123) ராஜ்மேரி சார்லஸ் KER
124) ரமோலா அதிசயராஜ் TIN
125) ராணி பிரபாகரன் TIN
126) ராணி சாமுவேல்ராஜ் CHE
127) ரத்னா டென்னிஸன் CBE
128) ரத்னாவதி பாண்டியன் CHE
129) ரெஜினா விக்டர் TIN
130) ரோஸி ஸ்டீபன் CHE
131) ரூபவதி நோபிள் TIN
132) ரூபி ஜாண் MUM
133) ரூபி ஜாண்ஸன் TIN
134) ரூத் ஜாண்ஸன் TIN
135) சலோமி மனோகர் DR. CHE
136) சாமுவேல் டேவிட் TPT
137) சாரா பாலசிங் MDU
138) சரோஜினி எலிசபெத் CHE
139) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
140) செல்வராஜ் CBE
141) செல்வராணி ஆல்பர்ட் CHE
142) செல்வராணி G CHE
143) செல்வி அமிர்தராஜ் TVR
144) ஷாலி எடிசன் CHE
145) சாந்தி ஆஷெர் TIN
146) சாந்தி ஆல்பர்ட் PCT
147) சாந்தி ஜெயசீலன் CHE
148) சாந்தி ரோஸ் CBE
149) ஷர்மிளா செல்வராஜ்.DR. CUD
150) ஷீபா சாம்ஸன் CHE
151) ஷெரீன் ஜெபராஜ் PAN
152) சவுந்தரம் சாலமோன் CHE
153) ஸ்டெல்லா டேவிட் TUT
154) ஸ்டெல்லா கனகராஜ் CHE
155) ஸ்டெல்லா சூசைய்யா TUT
156) சுகிர்தா ஆல்வின் CHE
157) சுகிர்தா சின்னதுரை TIN
158) சுஜாதா சாமுவேல் CHE
159) சுமித்ரா B. CHE
160) சுசீலா தியோடர் TCY
161) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
162) தாரா மாணிக்கம் CHE
163) தெல்மா ஸ்டேன்லி MDU
164) உமா குளோரி CHE
165) வனஜா ஹெர்பர்ட் TIN
166) வசந்தா அன்பன் TIN
167) வசந்தா சந்திரசேகர் CBE
168) வசந்தி கருணாகரன் CHE
169) வசந்தி வாசன் CHE
170) விஜயராணி A. CHE
171) விஜி டேனியல் CHE
172) விமலா ஜெயக்குமார் TUT
173) விண்ணரசி ரோஸ் CHE
174) வினோலியா ஜேம்ஸ் KOV
175) வினோலியா வில்சன் VAN
176) வைலட் கிறிஸ்டோபர் TIN
177) வைலட் சைரஸ் CHE
178) வெஸ்லி சாமுவேல் TUT

PRAYER-WINDOW  PRAYER-WINDOW

ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் ஜனவரி – 2023

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள் : 13–01–2023 இரண்டாம் வெள்ளி<br>நேரம் : காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள் : 20–01–2023 மூன்றாம் வெள்ளி<br>நேரம் : மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள் : 27–01–2023 நான்காம் வெள்ளி<br>நேரம் : இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

# பிரசன்ன திருநாள் – EPIPHANY-2023

## Friday, the 6th January 2023 – ஜனவரி, 6 2023 வெள்ளி

கிறிஸ்தவ பாரம்பரியத்தில், குழந்தை-இயேசுவை தரிசிக்க கிழக்கத்திய ஞானிகள் பெத்லகேமுக்கு வந்த நாளைக் குறிக்கும் வகையில் பிரசன்னத்-திருநாள் அல்லது ‘எபி-பானி’ அமைந்துள்ளது. ‘எபிபானி’ என்பது பண்டைய கிரேக்க மொழியில் “வெளிப்பாடு“ அல்லது “தோற்றம்“ என்ற பொருளில். புறஜாதிகளுக்கான (பிற மத-நம்பிக்கை) இயேசுவின் வெளிப்பாட்டைக் குறிக்கிறது. இது ‘12வது-இரவு’ ‘3-அரசர்-தினம்’ ஆகிய பெயர் களில் உலகின் பல நாடுகளில் கிறிஸ்துமஸ் தினமான கொண்டாடப்படுகிறது.

கிழக்கிலிருந்து ஞானிகள் எருசலேமுக்கு வந்து, ஏரோது ராஜாவிடம், ‘‘யூதரின் ராஜாவாகப் பிறந்தவர் எங்கே? கிழக்கில் அவரது விண்மீனைக் கண்டு, அவரை வணங்க வந்தோம்’’ என்றனர். மேசியா பெத்லகேமில் பிறப்பார் என்று கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தை அறிந்திருந்த ஏரோது குழந்தை-இயேசுவை கொல்ல விரும்பினார். பெத்லகேமில் குழந்தை இருந்த இடத்திற்கு நட்சத்திரம் ஞானிகளை வழிநடத்தியது, ஆனால், ஏரோது விடம் திரும்பிச் செல்ல வேண்டாம் என்று அவர்கள் கடவுளால் எச்சரிக்கப்பட்டு வேறுவழியாக திரும்பிச் சென்றனர்.

‘எபிபானி’ கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின் முடிவைக் குறிக்கிறது. கிறிஸ்துமஸ் மரங்கள், தங்கம்-வெள்ளி நிற அலங்காரங்கள், பலவண்ண விளக்குகள், வித-வித ஸ்டார்கள், பரிசுப்-பெட்டிகள் போன்ற கிறிஸ்மஸ் அலங்காரங்கள் முடிவுக்கு வரும் நாளாக இந்நாள் அமைந்துள்ளது. இந்த தேதிக்கு முன் உங்கள் மரத்தை அகற்றுவது உண்மையில் துரதிர்ஷ்டவசமானது என்று பாரம்பரியம் கூறுகிறது. எனவே, அலங்காரத்தை விட்டுவைக்க நீங்கள் விரும்பினால் இந்தநாள் வரை விட்டுவைக்காலம் என்பது கிறிஸ்தவ பாரம்பரியமாகும்.

# வேதாகம போட்டி-147

வேதபகுதி உன்னதப் பாட்டு

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

பதில்களுடன் வேதவசன இருப்பிடம் எழுதவேண்டும்

பதிலளிக்க கடைசி நாள் ஜனவரி-25

1. நேசரின் தலைமயிர் சுருள்-சுருளாக எதைப்போல் கருமையாய் இருக்கிறது?
2. நேசரின் நேசம் எதைப்பார்க்கிலும் இன்பமானது?
3. நேசரை அவருடைய தாய் எந்த மரத்தின்-கீழ் வேதனைப்பட்டு பெற்றாள்?
4. வாசல்களண்டையில் புதியவைகளும் பழையவைகளுமானவை என்ன உண்டு?
5. மணவாளியின் நேசம் எதைப்பார்க்கிலும் மதுரமாய் இருக்கிறது?
6. கனியை காக்கிறவர்களுக்கு 200-சேரும். யாருக்கு அந்த ஆயிரம் சேரும்?
7. சூலமித்தி எத்தனை சேனையின் கூட்டத்துக்குச் சமமானவள்?
8. வீட்டிலுள்ள ஆஸ்திகள் எல்லாம் இதற்காக அசட்டைபண்ணப்படும் - அது என்ன?
9. மணவாளியின் மேல் பறந்த கொடியானது என்ன?
10. அடைக்கப்பட்ட தோட்டம் - மறைவுகட்டப்பட்ட நீரூற்று - முத்திரிக்கப்பட்ட கிணறு, யார்?
11. நகரத்தின் வீதிகளிலும், தெருக்களிலும் திரிந்து தேடியும் யாரைக் காணவில்லை?
12. எதின் உட்புறத்தில் 'நேசம்' என்னும் சமுக்காளம் விரிக்கப்பட்டிருந்தது?
13. ராஜஸ்திரீகள் 60-பேர், மறுமனையாட்டிகள் 80-பேர், 'இவர்களுக்கு' தொகையில்லை:
அ) தாதிமார் ஆ) பாடகிகள் இ) பணிப்பெண்கள் ஈ) கன்னியர்
14. நேசர் தமது கரத்தை 'இதன்' வழியாய் நீட்டினார்?
அ) ஜன்னல் ஆ) வாசல்-கதவு இ) செங்கோல் ஈ) கதவு-துவாரம்
15. இஸ்ரவேலின் 60-சவுரியவான்கள் 'இதை' சுற்றி நிற்கிறார்கள்:
அ) கிணறு ஆ) சாலோமோனின்-ரதம் இ) சாலோமோனின்-மஞ்சம் ஈ) நீரூற்று
16. 'இவர்' உன்னதப்பாட்டைப் பாடியவர்:
அ) தாவீது ஆ) சாலோமோன் இ) மிரியாம் ஈ) அன்னாள்
17. வெள்ளை-வெளேர்னு தந்தம்போல் வெண்மை! செக்க-சிவந்த சொக்கத்தங்க சிவப்பு! பத்தாயிரம் பேரிலும் முத்தான சிறப்பு! யார் இவர்? யார் இவர்?
18. திருமணத்தில் சூட்டிய திருமுடி-கிரீடம்! மணநாளில் சூட்டிய மணிமுடி-கிரீடம்! அன்னை சூட்டிய அன்பு-முடி கிரீடம்! யாருக்கு இந்த கிரீடம்?
19. பூ-உண்டு, பிஞ்சு-உண்டு இதில்! காய்-இல்லை, கனி-இல்லை இதில்! குழி-நரி, குட்டி-நரி கெடுக்கும் இதை! இது என்ன?
20. வலிது, வலிது, மரணம்போல் வலிது! கொடிது, கொடிது, பாதாளம்போல் கொடிது! சுடுது, சுடுது, ஜுவாலைபோல் சுடுது! இது என்ன?

## வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

## ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST

Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

KING OF ALL THE EARTH MELECH KOL HA ARETZ

## பூமி அனைத்திற்கும் ராஜா

EPISODE - 44 மெலேக் கோல் ஹா-ஏரெட்ஸ் பாகம் - 44

தேவன் பூமியனைத்திற்கும் ராஜா; கருத்துடனே அவரைப் போற்றிப் பாடுங்கள். சங்–47:7

For God is the King of all the earth: sing ye praises with understanding. Psalm-47:7

தமது பரிசுத்த சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து பூமியை அரசாளுகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு வருடப்பிறப்பின் கிருபை யும், மகிமையுமான நல்வாழ்த்துக்கள்.

சங்-24:1 பூமியும் அதின் நிறைவும் உலகமும் அதிலுள்ள குடிகளும் உம்முடை யது, நீரே ராஜா.

எண்-14:21 2023ம் வருடம் இந்தியா உமது மகிமையால் நிறைந்திருக்கும்படி உமது ஜீவனைக்கொண்டு ஆசீர்வதிப்பதற்காக கர்த்தாவே உமக்கு ஸ்தோத்திரம்.

செப்-3:15 இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் இந்திய தேசத்தின் நடுவில் இருக்கிறீர். தேவனுக்கே சகல கனமும் மகிமையும் உண்டாவதாக.

சங்-47:2,9 உன்னதமானவராகிய கர்த்தர் பயங்கரமானவரும், பூமியின்மீதெங்கும் மகத்துவமான ராஜாவுமாயிருக்கிறார் என்பதை ஜனங்களின் பிரபுக்கள் (தேசத்தின் உயர் அதிகாரிகள்) அறிந்துகொள்ளவும். இவ்வருடத்தை ஆபிரகாமின் தேவனுடைய ஜனங்களாக மக்கள் சேர்க்கப்படுகிற (இரட்சிக்கப்படுகிற) வருடமாக முன்குறித்தீரே உமக்கு நன்றி தேவனே!

எசே-37:22 ஒரே ஜாதியாக்குவேன் (பரலோக-ஜாதி). ஒரே ராஜாவாகி நானே இந்தியாவில் நிலைத்துநிற்பேன் என முத்திரை போட்டதற்காக நன்றி இயேசுவே!

யாத்-33:16 பூமியின் ஜனங்கள் எல்லாரிலும் உமது ஜனமாகிய நாங்கள் விசேஷித்தவர்கள் என்பதை, நீர் எங்களுடன் வருவதினாலும், உமது கண்களில் எங்களுக்கு கிருபை கிடைத்ததினாலும், எங்களைப் பேர்சொல்லி அழைத்து அறிந்து இருப்பதை வெளியரங்கமாக்குகிற ராஜாதி ராஜாவுக்கு அல்லேலூயா!

ஜெபம்: இந்திய தேசமும், பூமியனைத்தும், அதன் மேலுள்ள வானாதி வானங்கள் யாவும் உம்முடையது என்பதை வெளியரங்கமாக்குகிற காலத்தையும் நேரத்தையும் வரவழைத்த எங்கள் ராஜாவே, உம்மைத் துதிக்கிறோம். தாம் ஏற்படுத்தின ராஜாவுக்கு பெலமளித்து, தாம் அபிஷேகம் பண்ணின எங்கள் கொம்பை உயரப்பண்ணுகிற உமக்கே துதி, கனம், மகிமை உண்டாவதாக பிதாவே. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தேன்துளி வேதவசனக் கதை–140*. . .

# மன்னிப்பின் சுபாவம் மனிதரை மாற்றும்

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.



சகோ. அசரியா

உலக வரலாற்றில் சிறந்த ஜனாதிபதிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர் ஆபிரகாம் லிங்கன். ஆபிரகாம் லிங்கனின் அரசியல் எதிரியான ஸ்டான்ஸ்டன், பொது இடங்களில் லிங்கனைத் தாக்கிப் பேசுவது வழக்கம். ‘ஆதிமனித குரங்கு’ ‘கருப்பு கோமாளி’ என கேவலமாகப் பேசி லிங்கனை அவமதித்து வந்தார். ஆனால் லிங்கனோ, ஸ்டான்ஸ்டனுக்கு விரோதமாக எதையும் பேசவில்லை. மாறாக, ஸ்டான்ஸ்டனுக்கு இருந்த திறமைகளை புகழ்ந்து, அமெரிக்காவை வல்லரசாக உருவாக்குவதற்கு தேவையான முயற்சியாக தன்னை அவதூறாக பேசிவந்த ஸ்டான்ஸ்டனையே ராணுவ மந்திரியாக நியமித்தார். அவர் பல ராணுவ வெற்றிகளை பெற உதவிகளை செய்தார். இந்த அன்பின் செயல் ஸ்டான்ஸ்டனுடைய உள்ளத்தை உடைத்தது. ஸ்டான்ஸ்டன் ஒரு புதிய மனிதரானார். ஆபிரகாம் லிங்கனின் திட்டங்களை செயல்படுத்தவும், அமெரிக்க தேசம் வல்லரசாகவும் தம்மை அர்ப்பணித்தார். லிங்கனின் மரணம் அடைந்தபோது தேம்பி அழுத ஸ்டான்ஸ்டன், ‘உலகத்தோற்றம் முதல் இன்றுவரை, லிங்கனைப்போற்ற அன்பான, திறமையான ஆட்சியாளர் இருந்ததில்லை என சாட்சி கொடுத்தார்.

நம் வாழ்விலும் லிங்கனைப்போலவே நம் எதிராளிகளுக்கும் நன்மைகளை செய்ய வேண்டும். பரி.பவுல் சொல்கிறார்: ‘‘நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு’’ என்று (ரோமர் 12:21). இதுவே இயேசுவின் கட்டளையுமாகும். நாமும், அன்பு மற்றும் சகிப்புத்தன்மையுடன் பிறருக்கு நன்மை செய்யும்போது கர்த்தர் நம்மையும் நிச்சயமாய் ஆசீர்வதிப்பார்.

மற்றொரு முறை, எல்லை பாதுகாப்புப் பணியில் தூங்கிய குற்றத்துக்காக போர்வீரன் ஒருவன் லிங்கன் முன் நிறுத்தப்பட்டபோது, அவன் ஒரு ஏழை விதவையின் ஒரே மகன் என்பதை அறிந்து அவன்மேல் அன்புகூர்ந்து அவனை மன்னித்து தூக்குத்தண்டனையிலிருந்து விடுவித்தார். இதற்கு பிரதி உபகாரமாக அந்த போர்வீரன், கடினமாக உழைத்து, நாட்டுக்காக இரத்தம் சிந்தி போர்புரிந்து, பல வெற்றிகளை குவித்து அமெரிக்கா வல்லரசாக மாறுவதற்கு கருவியாக செயல்பட்டான் என சரித்திரம் கூறுகிறது.

பிரிய விசுவாசிகளே! இந்த புதிய ஆண்டிலே அன்பு, மன்னிக்கும் பண்பு போன்ற குணாதிசயங்களை இயேசு நம்மிடம் எதிர்பார்க்கிறார். இவற்றை நம் வாழ்வில் கடைபிடித்து ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் வாழ்வோம். வேதம் சொல்கிறது:

நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்;
அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார். ஏசா–55:7
மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மத் 6:14

EPISODE 6

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்



**இந்திய திருச்சபை சரிதை:**
**(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)**
**தொகுதி-2 பகுதி-1**

2. இந்திய இடைக்காலத்தில் கிறிஸ்தவர்கள்

1. இடைக்கால அருட்பணி பயண-வழிகள்:

இந்தியா மற்றும் மேற்கு நாடுகளுக்கு இடையேயான

பயண வழிகள் பற்றி அதிக தகவல்கள் இல்லை. கி.பி-800ம் ஆண்டில், மேற்கத் திய உலகின் தத்துவம் மற்றும் கலையின் ஊடுருவல் போன்றவை இந்தியா மீது ஏற்படுத்திய தாக்கம் பற்றி பதிவு செய்வதற்குப் போதுமான அளவு சான்றுகள் இல்லை. இந்தியாவில் வசித்த கிறிஸ்தவர்கள் எண்ணிக்கையில் மட்டுப்படுத்தப் பட்டாலும், அவர்களின் செயல்பாடுகளின் வரம்பு, குறிப்பிடத்தக்க நிலையில் வலுவானதாக கணக்கிடப்படுகிறது.

கேரளாவில் நிறுவப்பட்ட கிறிஸ்தவ சமூகம் இந்தியாவில் ஏற்கனவே நீண்ட காலமாக வசித்தாலும், அவர்கள் எந்த நூற்றாண்டுகளில் இந்தியாவை வந்து அடைந்தனர் என்பது பற்றிய தகவல் துல்லியமாக இல்லை. கடந்த 7-நூற்றாண் டுகளில் கிறிஸ்தவ சமூகங்களின் இந்திய வருகையை தொடக்க காலத்திற்கும் நவீனத்தின் தொடக்கத்திற்கும் இடையில் (இடைக்காலம்) பதிவு செய்வதற்கு போதுமான சான்றுகள் எங்களிடம் இல்லை என்கின்றனர் ஆய்வாளர்கள். பார்வை யாளர்கள் மற்றும் பயணிகள் அனைவரும் கிறிஸ்தவர் மீது விசேஷ அக்கறை காட்டவில்லை என்பது இங்கு தெளிவாக தெரிகிறது.

16-ம் நூற்றாண்டில், போர்த்துகீசியர்கள்தான் இந்திய ஆய்வுகளை ஆரம்பித்தனர். அவர்கள் இடைக்கால கிறிஸ்துவர்களை எதிர்கொள்ளும்படிக்கு, நீண்ட காலத் திற்கு முன்பு இந்தியாவுக்கு வருகைதரவில்லை. இந்தக் காலக்கட்டத்தில் மேற்கு-பகுதிக்கு விஜயம் செய்தோம். எங்களிடம் உள்ள சில தகவல்களுக்காக சீன மற்றும் ஐரோப்பிய பயணிகளுக்கு நாங்கள் கடன்பட்டுள்ளோம் என்கின்றனர்.

தொடர்ந்து சீன யாத்ரீகர்கள் தகவல்களைத் தேடி இந்தியாவிற்குள் நுழைநதனர். சீனா இந்தியர்

மற்றும் இலங்கையின் கிழக்குக் கரையோரம் போன்றவை தொடர்ச்சியாக இருந்ததாகத் தெரிகிறது. ஆயினும் இரு திசைகளிலும் இராஜ தந்திர பயணிகள் எவரும் பயணித்ததாகத் தெரியவில்லை. சரியாக கி.பி-964 முதல் 976 வரை, கி-யே, என்பவர் இந்தியாவில் இருந்த தாக பதிவு செய்யப் பட்டுள்ளது. முந்நூறு துறவிகளுடன் அனுப்பப்பட்ட இவர் கடந்த மற்றும் சமகால பௌத்தம் பற்றியும் பேரரசர் புத்தர் மற்றும் புத்தர் பற்றிய புத்தகங்களின் சான்றுகள் நினைவுச்சின்னங்கள் போன்றவற்றைத் தேடினாராம்.

பதினோராம் நூற்றாண்டு வரை இந்தியாவில் குறைந்த அளவிலேயே முஸ்லிம் கள் இருந்ததாக பயணிகள் குறிப்பிடுகின்றனர். இந்தியாவின் மேற்கில், அரபுப் படையின் ஆதிக்கம் நிலவியது. அரேபியர் இந்திய வர்த்தகத்தை ஏகபோகமாக அனுபவித்தனர். அதன் விளைவாக அவர்களது செல்வச் செழிப்பு மகத்தாக அதிகரித்தது. ‘அரபிக்கடல்’ என்ற பெயர் அவர்களது இந்திய வர்த்தகத்தின் ஆதிக்கத்தை விளக்கும் வகையில் அமைந்தது என்றே சொல்லலாம்.

ஆர்.எச். மேஜர் என்பவர் எழுதும் போது, ‘முகமதியரின் இந்திய வர்த்தகம், ஊடுருவல், போன்றவை அதிக தடையின்றி அமைந்தது. ஆனால் மத்தியதரைக் கடலில் முகமதியரின் ஆதிக்கம் தடையின்றி இருக்கவில்லை. அவர்கள் அங்கு செல்ல நாள்-நேரம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது’ என எழுதியுள்ளார்.

ஐரோப்பாவின் தோற்றத்தின் முக்கிய அம்சம் இருண்டகாலம். இந்த காலத்தில் தான் இத்தாலிய வர்த்தகத்தின் பெருக்கம் அமல்ஃபி, ஜெனோவா, பிசா, வெனிஸ் மற்றும் புளோரன்ஸ். நகரங்களில் ஏற்பட்டது. கி.பி-840ல் வெனிஸ் மத்திய ஆசியாவின் பிரபலமான வர்த்தக மையம் ஆயிற்று.

அதனாசியஸ் நிகிடின் கி.பி.1468-ல் காஸ்பியன் கடலைக் கடந்து அஸ்ட்ரா கானுக்குச் சென்றார். பாகு, பொக்காரா சென்று பின்பு தெற்கே பெர்சியாவின் டெமாவெண்டிற்குச் சென்றார். அங்கிருந்து யெஸ்த் புந்தர்-அப்பாஸ் வழியாக ஓர்முஸுக்குச் செல்ல முடிந்தது. சாலுக்கு செல்லும் பயணம், பம்பாய்க்கு தெற்கே 30-மைல் தொலைவில், 6-வாரங்களானது. இந்த கடல் பயணம் அத்தனை எளிதாக இல்லை. ஆனால், ஐரோப்பியருக்கு இவ்வழி மட்டுமே சாத்தியமாக இருந்தது.

அலெக்சாண்டரின் இராணுவம் இந்தியாவிலிருந்து பலுசிஸ்தான் வழியாக மெசபடோமியா சென்ற பாதை ஒரு முக்கிய வழிதான் ஆனாலும், எந்த ஐரோப்பிய பயணியும் இப்பாதையில் சென்றதாக குறிப்புகள் இல்லை.

இந்திய இடைக்காலத்தில் கிறிஸ்தவர்கள் எவரும் அப்போஸ்தலனாகிய பவுலைப் போல் பயணித்து கிறிஸ்துவைப் போதிக்க முற்படவில்லை. ஒரு பயணி மட்டுமே எகிப்திலிருந்து இந்தியாவுக்கு கடல் மார்க்கமாக வந்ததை தமது கிரேக்க மொழி அறிக்கையில் கூறுகிறார். ஐரோப்பாவின் பயணிகள் தரைவழி பயணமே மேற்கொண்டுள்ளனர். குறிப்பிடத்தக்க வலுவான இந்திய பயண வழிகள் பற்றிய ஆதார பதிவுகள் இல்லை என்பது வருந்தத்தக்கது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope’s College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் நன்றி-பலிகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

1) இந்த புதிய (2023) ஆண்டுக்காக... புத்தாண்டில் எல்லா நலன்களும் வளங்களும் எல்லா மக்களுக்கும் கிடைத்திட... அன்பு, மனிதநேயம், ஒற்றுமை ஆகிய உணர்வுகள் மக்கள் மத்தியில் ஓங்கி வளர...

2) அகில உலக மக்களின் சுக வாழ்வுக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளின் பொருளாதாரம் மேம்பட... பெருந்தொற்று, புயல்-மழை, பூமி-அதிர்ச்சி, எரிமலை, காட்டுத்-தீ போன்ற இயற்கை பேரிடர்களிலிருந்தும், பிரிவினைவாதம் - தீவிரவாதங்களி லிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

3) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்திய பொருளாதாரம் சீரடைய... இந்தியாவில் மதவாத, வன்முறைவாத, பிரிவினைவாத இயக்கங்கள் வேரறுக்கப் பட... ஒன்றிய அரசு எல்லா மாநிலங்களையும் சமமாய் பாவித்து, மாநிலங்களுக்கு சேரவேண்டிய நிலுவைத் தொகையை பாரபட்சமின்றி வழங்க... விலைவாசிகள் கட்டுப்படுத்தப்பட... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

4) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள் அனைவரும் இன -மத - மொழி வேறுபாடின்றி வாழ... தமிழ்நாட்டில் விவசாயம் மற்றும் தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டில் மத-பிரிவினைவாதங்கள், வன்முறைவாதங்கள் கட்டுப்படுத்தப்பட... புயல் - மழை - வெள்ளம் - கொரோனா பாதிப்புகள் நீங்க...

5) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

6) உயர் கல்வி பயின்று வரும் நம் பிள்ளைகள் கி.ஃ.ப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜாஷ்வா மேத்யூ, ஷெர்லி ஜூடியா, டிரிசியா லவ்ஸ்லி, ஜாய்ஸ் கிறிஸ்டினா, ஜோ.ஃ.ப்னா, ஜெனிபர், கி.ஃ.ப்ட்லின், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு சிறப்பான ஞானம் வழங்கப்பட...

7) திருமதி. புஷ்பா, திருமதி. ஜெயா சாமுவேல், திரு. அப்பன் டேவிட், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. எஸ்தர், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. எபனேசர், திரு. பிலிப், திருமதி. ஞானரத்தினபாய், திருமதி. தங்கம் ஜோன்ஸ், திருமதி. மேரி கிரேஸ் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

8) திரு. சிவகுமார், திருமதி. சாந்தி, திருமதி. சுந்தரிபாய், திருமதி. மேரி தேவதாஸ், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. மங்களராணி ஞானப் பிரகாசம், திருமதி. ஹேமலதா ராஜமணி, திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. அலீஸ் ரெஜினாபாய் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

9) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. கலையரசி செல்வராஜ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன், திருமதி. சுவர்ணலதா அற்புதராஜ், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திருமதி. ஜெயகுமாரி, இசபெல்லா எஸ்தர், திருமதி. ரூபவதி நோபிள், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு.எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ் குடும்பங்களுக்காக...

# வேதாகம போட்டி-146 (பிரசங்கி)

## சரியான விடைகள்

1. மரம் பிர:-11:3
2. அதிக சலிப்பு பிர:-1:18
3. எல்லா மனுஷர் மேலும் பிர:-12:13
4. தொல்லை பிர:-3:10
5. ஞானி-மூடன் பிர:-10:2
6. மூடன் பிர:-4:5
7. நேர்ந்துகொள்ளாதிருப்பது பிர:-5:5
8. நீதிமான்களும் ஞானிகளும் பிர:-9:1
9. காற்று பிர:-1:6
10. பிரசங்கி பிர:-12:8
11. மூடனின் நகைப்பு பிர:-7:6
12. மரித்தவர்கள் பிர:-4:2
13. செத்த சிங்கத்தை பிர:-9:4
14. ஐசுவரியம் பிர:-5:13
15. இணங்குதல் பிர:-10:4
16. வியர்த்தமாயிருக்கும் பிர:-5:7
17. மனுஷ-ஆவி, மிருக-ஆவி பிர:-3:21
18. ஞானம் பிர:-10:10
19. இருதயம் பிர:-7:3
20. வேலை செய்கிறவன் பிர:-5:12

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL:** 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL:** ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B.ACCOUNT NO:** 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:** REV. DHARMARAJA SJD: 9789914463




## புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



**இரட்சிப்பு** பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலக-வலைதள பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்துத் திருச்சபை விசு வாசக் குடும்பத்தார், தபால்-துறை மற்றும் அச்சக-நண்பர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்களது உள்ளம் கனிந்த புதுவரும்-2023 நல்வாழ்த்துக்கள்.

**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்



Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th January 2023.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. ரஷிய - உக்ரைன் போர் 300-நாட்களை கடந்த நிலையில் ‘பேட்ரியாட்’ ஏவுகணை, நவீன குண்டுகள் போன்ற வான்-வழி ஆயுதங்கள் கொண்ட 1.80-பில்லியன் டாலர் ராணுவ-உதவியை உக்ரைனுக்கு வழங்குகிறது அமெரிக்கா.

2. ஆதார் அட்டை 10-ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்ட நிலையில், இதுவரை புதுப்பிக்காதவர்கள், ‘மை ஆதார்’ போர்ட்டல் அல்லது ‘ஆதார்’ மையம் வழியாய் புதுப்பித் துக்கொள்ள வேண்டும் என ஆதார் ஆணையம் அறிவிப்பு.

3. சென்னை-எழும்பூர் ரயில்நிலையம் ரூ.735-கோடியில் சீரமைக்கப்பட உள்ளது. 144-வயதான பழைய கட்டிடமும் பழமைமாறாமல் சீரமைக்கப்படும். இப்பணிகள் 3-ஆண்டு களில் நிறைவடையும் என தென்னக ரெயில்வே தகவல்.

4. இந்தியாவில் வங்கிகள், கூட்டுறவு மற்றும் சிறு-நிதி வங்கிகள் என, ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) கட்டுப்பாட்டிலுள்ள நிதி நிறுவங்களின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்ய சர்வதேச நிறுவனங்களை பணியமர்த்த ஆர்பிஐ முடிவு

5. நட்சத்திர டென்னிஸ் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்கும் இவ்வாண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டி யான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் இம்மாதம் 16-முதல் 29ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

Posted on: 10th Janujary 2023

To

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2–A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.